ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2177/8 - 2020 මැයි මස 27 වැනි බදාදා - 2020.05.27

*2177/8 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டம்

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 41 ஆம் பிரிவின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**டலஸ் அலஹப்பெரும,**
கல்வி, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்.

கொழும்பு,
*2020, மே 26.*

**கட்டளை**

1. 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 10 ஆந் திகதிய 2166/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திருத்தியமைக்கப்பட்ட தேசிய விளையாட்டுச் சங்க கட்டளையானது கீழ்வரும் விதத்தில் 2020 ஆம் ஆண்டிற்கு ஏற்புடையதாக மாத்திரம் திருத்தம் செய்யப்படுகின்றது.

இலக்கம் 04 இன் 5 (4) (ந) பிரிவின் இலக்கம் I மற்றும் III ஆகிய பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள "நிதியாண்டு முடிவடைந்த இரண்டு மாதத்தினுள்" எனும் பதத்திற்குப் பதிலாக "நிதியாண்டு முடிவடைந்து ஆறு மாதத்திற்குள்" என 2020 ஆம் ஆண்டிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்கு ஏற்புடையதாக மாத்திரம் திருத்தம் செய்யப்படுகின்றது.

1A - G 32271 — 27 (2020/05)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலக்கம் 09 இன் "மேற்படி குழுவினை நியமனஞ் செய்த தினத்திலிருந்து 30 நாட்களுக்குள்" எனும் பதத்தினை நீக்கி "பதவியாளர் தேர்தல் இடம்பெறும் உரிய தினத்திற்கு 75 நாட்களுக்கு முன்னர்" என 2020 ஆம் ஆண்டிற்கு மாத்திரம் திருத்தம் செய்யப்படுகின்றது.

அவ்வாறே 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து மேலே குறிப்பிடப்பட்ட திருத்தங்கள் செல்லுபடியற்றதாவதுடன் மீண்டும் 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து தேசிய விளையாட்டுச் சங்கங்கள் அனைத்தும் தமது நிறைவேற்றுக் குழுவின் வாயிலாக உறுதிப்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்களை ஒவ்வொரு நிதியாண்டு முடிவடைந்து இரண்டு மாதத்தினுள் கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்க வேண்டியதுடன் பதவியாளர் தேர்தல் குழு நியமிக்கப்பட்ட தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் பதவியாளர் தேர்தல் குழுவால் வாக்காளர் (வாக்குரிமை கொண்ட இணைப்பமைப்புகளுக்கு) பெயர்ப்பட்டியல் தொடர்பான நடவடிக்கைகளை முடிவுறுத்தி தேசிய விளையாட்டுச் சங்கத்தின் சகல உறுப்பினர்களுக்கும் அறிவித்தல் வேண்டும்.

2. 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதிய 2089/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் வாயிலாக வெளியிடப்பட்ட கட்டளைகளில் இலக்கம் 3(இ) பிரிவில் "நியமனத் திகதி தொடக்கம் இரண்டு மாதங்களுக்குக் குறையாத காலப்பகுதிக்குள்" எனும் பதத்தினை நீக்கி 2020 ஆம் ஆண்டிற்கு ஏற்புடையதாக மாத்திரம் "பதவியாளர் தேர்வினை நடாத்துவதற்கு உரிய தினத்திற்கு 55 நாட்களுக்கு முன்னர் வேட்புமனுக்களைக் கோருதல் வேண்டும்" என்பதாக திருத்தம் செய்யப்படும். 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து மீண்டும் 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதிய 2089/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் வாயிலாக வெளியிடப்பட்ட தேசிய விளையாட்டுச் சங்கக் கட்டளைகளில் இலக்கம் 3 (இ) பிரிவு அமுல்படுத்தப்படும்.

06-38

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.